RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 262 | செப்டம்பர்.23 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பின்புலத்தில் பாஜக, அமித்ஷா இருப்பதால் விஜய் அகந்தைப் பேச்சு: அப்பாவு விமர்சனம்



திருநெல்வேலி: செப்.23-

விஜய்யின் பின்புலத்தில் பாஜக, அமித்ஷா இருக்கும் தைரியத்தில்தான், அரசியல் அரிச்சுவடி தெரியாமலேயே அவர் அகந்தையோடு பேசி வருகிறார் என நெல்லையில் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக சட்டப்பேரவை தலைவர் அப்பாவு கலந்து கொண்டு பணிகள் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த சபாநாயகர் அப்பாவு கூறியதாவது: தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது சுற்றுப் பயணங்களின் போது சினிமாவில் பேசுவதை போல் பேசுகிறார் அகந்தையோடு அவர் பேசி வருகிறார்.

அமித்ஷா சொல்லித்தான் புஸ்ஸி ஆனந்த் மூலம் விஜய் கட்சி ஆரம்பித்துள்ளார். பின்புலத்தில் அமித்ஷா பாஜக இருக்கும் தைரியத்தில் தான் விஜய் அகந்தையோடு கூட்டங்களில் பேசுகிறார். முதல்வரை மிரட்டும் தொனியில் பேசுவதில் இருந்தே பாஜக தான் விஜய்யை இயக்குகிறது என்பது தெரிய வருகிறது. முதல்வரை, பிரதமரை விமர்சிக்கும் போது கண்ணியத்துடன், கவனத்துடன் பேச வேண்டும்.

தமிழக வெற்றிக் கழகத்தை கண்டு ஆளும் கட்சி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பயப்படுபவர்களுக்கு தான் பயம் வர வேண்டும். தமிழ்நாட்டில் யாரும் யாருக்கும் பயப்படவில்லை. இவரைப் போல் ‘தலைவா’ படப் பிரச்சினைக்கு மூன்று நாட்கள் கோடநாட்டில் காத்திருந்து காலில் விழுந்தவர்கள் நாங்கள் அல்ல. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசி அப்பாவு, “ஜிஎஸ்டி வரி விலக்கு மக்களுக்கான தீபாவளிப் பரிசு என்று பிரதமர் அறிவித்துள்ளார் ஆண்டுக்கு 2.5 லட்சம் கோடி ரூபாய் சலுகை கிடைக்க உள்ளது. இதனால் மக்கள் சேமிப்பு உயரும் எனப் பிரதமர் சொல்கிறார். அப்படியென்றால் 8 ஆண்டு காலமாக அவர்கள் சேமித்த 20 லட்சம் கோடி ரூபாய் எங்கு சென்றது எனப் பிரதமரிடம் கேளுங்கள்.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததால் நிதியை வழங்கவில்லை என மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவிக்கிறார். பாஜக ஆட்சி செய்யும் மாநிலமான மகாராஷ்டிராவில் மும்மொழிக் கொள்கை ஏற்கப்படவில்லை ஆனால் அங்கு நிதி கொடுக்கப்பட்டுள்ளது மத்திய அரசு கொடுக்கும் நிதியை முறையாக கொடுக்க வேண்டும். மாற்றான் தாய் மனப்பான்மையோடு எந்த மாநிலத்தையும் நடத்தக்கூடாது.

நேரு கொண்டு வந்த இருமொழிக் கொள்கைதான் இன்று வரை தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது ஒரு போதும் இந்தியையும் ஏற்க மாட்டோம்; மும்மொழிக் கொள்கையையும் ஏற்க மாட்டோம். அரசுப் பள்ளிகள் குறித்து ஆளுநர் ஐயோ பாவம் எதுவும் தெரியாமல் எழுதிக் கொடுத்ததைப் பேசுகிறார்.

பாமகவில் நிலவும் உட்கட்சி பூசல் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து சட்டப்பேரவை கூடும்போது பார்த்துக் கொள்ளலாம்.

## மாயமான கோயில் சொத்துகள் தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ய ஐகோர்ட் உத்தரவு



மதுரை: செப்.23-

கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் தொடர்பாக 2015ம் ஆண்டில் வருவாய்த் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து தயாரித்த அறிக்கை மாயமானதாக கூறப்படும் நிலையில் அந்த அறிக்கையை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்

திருத்தொண்டர் சபையைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: ”கரூர் மாவட்டத்தில் உள்ள வஞ்சுளீஸ்வரர் கோயில், அக்னீஸ்வரர் கோயில், கல்யாண பசுபதீஸ்வரர் கோயில் உள்பட 64 கோயில்களுக்கு ஏராளமான சொத்துகள் உள்ளன. இந்த சொத்துகளில் பெரும்பாலானவை தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சில சொத்துக்கள் தனி நபர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட கோயில்களுக்கு சொந்தமாக சுமார் 500 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலங்களை ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் இருந்து மீட்டு கோயில்களின் வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே கரூர் மாவட்ட கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் இருந்து மீட்டு பராமரிக்க உத்தரவிட வேண்டும்” என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வில் இன்று விசாரணை நடைபெற்றது. அப்போது மனுதாரர் தரப்பில், கோயில் நிலங்கள் குறித்து வருவாய்த் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து 2015ல் அறிக்கை தயாரித்தது. அந்த அறிக்கை தற்போது மாயமாகியுள்ளது. தற்போது கோயில்களுக்கு சொந்தமான 500 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்த சொத்துக்களின் மதிப்பு ரூ.35 ஆயிரம் கோடியை தாண்டும். எனவே கோயில் நிலங்களை மீட்க உத்தரவிட வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், கரூர் மாவட்டத்தில் எத்தனை கோயில்கள் உள்ளன? அந்த கோயில்களின் சொத்து விவரங்கள் எவ்வளவு? அதில் எவ்வளவு சொத்துகள் ஆக்கிரமிப்பில் உள்ளது? எத்தனை கடைகள் உள்ளன? அதிலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது? ஆக்கிரமிப்புகளை மீட்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து கரூர் மாவட்ட ஆட்சியர், அறநிலையத் துறை ஆணையர் இணைந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

குறைந்தபட்சம் 20 கோயில்களின் நிலை அறிக்கையை அடுத்த விசாரணையின் போது தாக்கல் செய்ய வேண்டும். மேலும், 2015ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு மாயமான கோயில் சொத்துகள் தொடர்பான கோப்புகளையும் தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை அக்டோபர் 29ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் நவ.5 தொடங்கி 3 கட்டங்களாக நடைபெற வாய்ப்பு?..

புதுடெல்லி: செப்.23-

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் நவம்பர் 5 முதல் 15 தேதிக்குள் 3 கட்டங்களாக நடைபெற வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

243 சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் வரும் நவம்பர் 22ம் தேதியுடன் முடிவுக்கு வருகிறது. அதற்கு முன்பாக தேர்தலலை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது. கடந்த 2020ம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் அக்டோபர் 28 முதல் நவம்பர் 7 வரை 3 கட்டங்களாக நடைபெற்றது. அக்டோபர் 28ம் தேதி 71 தொகுதிகளுக்கும், நவம்பர் 3ம் தேதி 94 தொகுதிகளுக்கும், நவம்பர் 7ம் தேதி 78 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் நவம்பர் 10ம் தேதி அறிவிக்கப்பட்டன.

அதேபோல், இம்முறையும் மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது. பிஹாரின் மிகவும் முக்கியமான பண்டிகையான சாட் பூஜை அக்டோபர் 28ம் தேதி வருகிறது. எனவே, அந்த பண்டிகைக்குப் பிறகு தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.



பிஹாரில் தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அடுத்த வாரம் அம்மாநிலத்துக்குச் செல்ல உள்ளார். மேலும், பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதன்படி, மாநில இறுதி வாக்காளர் பட்டியல் செப்.30ம் தேதி வெளியிடப்பட உள்ளது. எனவே, ஞானேஷ் குமாரின் பிஹார் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

பிஹார் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்துள்ளது. பெயர் விடுபட்டவர்கள், தகுந்த ஆவணங்களுடன் சேர்க்க தேர்தல் ஆணையம் கால அவகாசம் அளித்தது. எனவே, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும்போதுதான், எவ்வளவு வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்பதன் உண்மை நிலவரம் தெரியவரும். பெயர் நீக்கத்தில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டால், சிறப்பு தீவிர திருத்த நடைமுறை முழுமையாக ரத்து செய்யப்படும் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே எச்சரித்துள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஸ்ஃ இண்டியா கூட்டணி: பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் இண்டியா கூட்டணிக்கும் இடையே மீண்டும் போட்டி ஏற்பட இருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜன்சக்தி கட்சி(ராம்விலாஸ்) ஆகியவை இருக்கின்றன. முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் இக்கூட்டணி மீண்டும் தேர்தலை எதிர்கொள்கிறது. இண்டியா கூட்டணியில், ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த முறை நடைபெற்ற தேர்தலில், மொத்தமுள்ள 243 தொகுதிகளில் பாஜக 80, ஐக்கிய ஜனதா தளம் 45, இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா(மதச்சார்பற்றது) 4 தொகுதிகளில் வெற்றி பெற்றன. தேர்தலுக்குப் பிறகு இரண்டு சுயேட்சைகள் இந்த கூட்டணியில் இணைந்தனர். இண்டியா கூட்டணி சார்பில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் 77 தொகுதிகளிலும், காங்கிரஸ் 19 தொகுதிகளிலும், சிபிஎம் 2, சிபிஐ 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘ஆபரேஷன் சிந்தூர்’ பார்ட் 2 நடக்குமா? பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியது என்ன? : பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்

ரபாட்: செப்.23-

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் பகுதி 2 அல்லது பகுதி 3 ஆகியவை பாகிஸ்தானின் நடத்தையைப் பொறுத்து அமையும் என்றும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் இந்தியா சகிப்புத்தன்மை காட்டாது என்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ் நாத் சிங் எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று வட ஆப்பிரிக்க நாடான மொராக்கோவில் இந்தியர்களிடம் உரையாடிய ராஜ்நாத் சிங், “ஆபரேஷன் சிந்தூரின் பகுதி 2 அல்லது பகுதி 3 நடவடிக்கைகள் தேவையா என்பது குறித்து நாங்கள் சொல்ல முடியாது. அது பாகிஸ்தானின் நடத்தையைப் பொறுத்தது. அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அவர்களுக்கு தகுந்த பதிலடி கிடைக்கும்.

ஏப்ரல் 22 அன்று பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதற்கு அடுத்த நாள் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்புச் செயலாளருடன் ஆலோசனை நடத்தினோம். அப்போது, அரசாங்கம் ஒப்புதல் அளித்தால் அவர்கள் நடவடிக்கைக்குத் தயாரா என்பதுதான் எனது முதல் கேள்வி. அவர்கள் ஒரு நொடி கூட தாமதிக்காமல், முற்றிலும் தயாராக இருப்பதாக பதிலளித்தனர். பின்னர் நாங்கள் பிரதமர் மோடியை அணுகினோம், அவர் எங்களுக்கு ஆதரவு அளித்தார், எங்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்தார். அதன் பிறகு என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்த்தீர்கள்.



பிரதமரும்கூட ஆபரேஷன் சிந்தூர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவே கூறியுள்ளார். எனவே தேவையெனில் அதை மீண்டும் தொடங்கலாம். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இந்தியப் படைகள் எல்லையைத் தாண்டி பல பயங்கரவாத முகாம்களை அழித்த பிறகு, பாகிஸ்தான் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியபோது, “நாங்கள் நல்ல உறவுகளை விரும்புகிறோம், ஏனெனில் மறைந்த பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் 'நண்பர்களை மாற்ற முடியும், ஆனால் அண்டை நாடுகளை மாற்ற முடியாது' என்று கூறினார். அதன் அடிப்படையில் போர் நிறுத்ததுக்கு ஒப்புக்கொண்டோம். நாங்கள் அவர்களை சரியான பாதைக்குக் கொண்டுவர முயற்சிக்கிறோம்” என்று அவர் கூறினார்.

மேலும், “பஹல்காம் தாக்குதலின் போது பயங்கரவாதிகள் எங்கள் மக்களின் மதத்தைக் கேட்ட பிறகு கொன்றனர். ஆனால், நாங்கள் மதத்தின் அடிப்படையில் யாரையும் கொல்லவில்லை, ஆயுதப்படைகள் நமது மக்களைக் கொன்றவர்களை மட்டுமே கொன்றன. இந்தியாவில் மக்கள் எந்த மதத்தை நம்பினாலும் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதில்லை. இதுதான் இந்தியாவின் குணம்” என்றார்

ராஜ்நாத் சிங் தற்போது மொராக்கோவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். வட ஆப்பிரிக்க நாடான மொராக்கோவுக்கு இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதன்முறையாகும்.

## வாக்காளர் சிறப்பு திருத்தத்துக்கு ஏற்பாடு: தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

புதுடெல்லி: செப்.23-

சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள, அக்டோபர் 30ம் தேதிக்குள் வாக்காளர் பட்டியலுடன் தயார் நிலையில் இருக்கும்படி மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளின் மாநாடு இந்த மாதம் தொடக்கத்தில் நடந்தது. அப்போது சிறப்பு தீவிர திருத்தத்துக்கு, வரும் அக்டோபர் 30க்குள் கடைசியாக திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலுடன் தயார் நிலையில் இருக்கும்படி தேர்தல் ஆணையம் கூறியது. இதையடுத்து




பல மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளனர்.

டெல்லி தலைமை தேர்தல் அதிகாரியின் இணைய தளத்தில் கடந்த 2008ம் ஆண்டு கடைசியாக மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் திருத்த பட்டியலை வெளியிட்டுள்ளார். பிஹாரில் சிறப்பு தீவிர திருத்தம் முடிந்தபின், நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. 2026ம் ஆண்டில் அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

வங்கதேசம் மற்றும் மியான்மரில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவில் குடியேறியவர்கள் பல மாநிலங்களில் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களை நீக்குவதே, சிறப்பு தீவிர திருத்தத்தின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ் கோம்பை ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற

# சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

தேனி, செப்.23-

தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சி ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி மேல்நிலைப் பள்ளியில் அன்று (20.09.2025) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் .என்.இராமகிருஷ்ணன் முன்னிலையில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் , உங்கள் குடும்பத்தின் நலன் அரசின் பொறுப்பு என்ற நோக்கத்தின் அடிப்படையில் நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் வட்டாரத்திற்கு மூன்று வீதம் மொத்தம் 24 மருத்துவ முகாம் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் இதுவரை 6 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது.

இம்முகாமில் இரத்தபரிசோதனை மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், இந்திய மருத்துவம் (ஆயுர்வேதம், சித்தா, யுனானி, யோகா, ஹோமியோபதி) ஆகிய 17 துறைகளை சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம், கோம்பை பேரூராட்சி ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், சித்தா பெட்டகம், மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் இணை இயக்குநர்கள் மரு.கலைச்செல்வி, மரு.அன்புச்செழியன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜவஹர்லால், உதவி ஆணையர் (தொழிலாளர் நலன்) .ராமராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, பேரூராட்சித்தலைவர்கள் .மோகன்ராஜ் (கோம்பை), .முகமது அப்துல் காஷிம் (உத்தமபாளையம்), வட்டாட்சியர் .கண்ணன், செயல் அலுவலர் (கோம்பை) .சுருளிவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# முன்னாள் படைவீரர் நலவாரிய நிர்வாக குழு கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, செப்.23-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர் நலவாரிய நிர்வாக குழு கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகு மீனா, தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர் நலம் பேணும் மறுவாழ்வுத் திட்டங்கள், சுயதொழில் வேலைவாய்ப்புகள், நிதி உதவிகள், மானியங்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர் அலுவலகத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு அரசாணையின்படி மாவட்ட முப்படை வீரர் வாரியம் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாரியத்தின் தலைவர் ஆவார். மேலும் அரசு அலுவலர்கள் அலுவலர் சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆண்டிற்கு ஒரு முறை இவ்வாரியத்தின் கூட்டம் நடத்தப்பட்டு முன்னாள் படைவீரர்கள் மற்றும் இந்நாள் படைவீரர்கள் மறுவாழ்வு தொடர்பான ஆலோசனைகள் பெற வேண்டும் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் 54 வது ஆண்டு கூட்டம் 22.07.2024 அன்று நடைபெற்றது. இன்று வாரியத்தின் 55வது கூட்டம் இன்று நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தில் சுமார் 20க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள், அலுவலர் சாரா உறுப்பினர்கள் கலந்து தங்களது கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தில் சுமார் 45 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ4.09 கோடி மதிப்பில் மானியம் பெற்று தொழில் முனைவோராக உருவாகியுள்ளனர். திறன் மேம்பாட்டு பயிற்சி மூலமாக 34 முன்னாள் படைவீரர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்துக்கட்ட பயிற்சி நடைபெறவுள்ளது, எனவே முன்னாள் படைவீரர்கள் துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களிடம் உரிய வழிகாட்டுதல் பெற்று சுற்றுலா வழிகாட்டி பயிற்சி பெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. மேலும் முதல்வர் மருந்தகம் திட்டத்தில் இணைந்து மானியம் பெற்று, மருந்தகம் அமைத்து பயன்பெறுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் மேஜர் ஜெயகுமார், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திரு.சக்திவேல் (நாகர்கோவில்), திரு.சுரேஷ் (மார்த்தாண்டம்), அரசு மற்றும் அரசு சாரா நிர்வாக குழு உறுப்பினர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# கட்டுமான தொழிலாளர்களுக்கான திறன்பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீன துவக்கி வைத்தார்



கன்னியாகுமரி, செப்.23-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், கோணம், அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான, திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் கலந்துகொண்டு கட்டுமான தொழிலாளர்களிடையே தெரிவிக்கையில்

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தில், 54 வகையான கட்டுமானத் தொழில்களில் பணிபுரியும், பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வாரியத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, தமிழ்நாடு முழுவதும், பதிவு பெற்ற 50 ஆயிரம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையுடன் இணைந்து, தொழில் சார்ந்த நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்து, அவர்களின் திறனை மேம்படுத்த, அந்தந்த மாவட்டத்திலேயே அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணத்தில் அமைந்துள்ள, அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான, திறன் மேம்பாட்டு பயிற்சி இன்று முதல் வழங்கப்பட உள்ளது.

அதன்படி கொத்தனார், சித்தாள், தச்சு வேலை, வர்ணம் பூசுதல், கம்பி வளைப்பவர். பிளம்பர். மின்பணி வேலை, சலவைக்கல் ஒட்டுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அறுத்தல் உள்ளிட்ட 11 தொழில் பிரிவுகளின் கீழ், பயிற்சியில் பங்குபெறும் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதிய இழப்பீட்டுத்தொகையாக ரூ.800/ உடன் கூடிய 7 நாட்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியில் வயது 18 வயது முதல் 60 வரை உள்ளவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள். 11 தொழில் இனங்களில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. மஸ்தூர் தொழில் இனத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மீதமுள்ள 11 தொழில் இனங்களில் ஏதாவது ஒன்றில் பயிற்சி பெற பெறலாம்.

இப்பயிற்சி இன்று (22.09.2025) முதல் 28.09.2025 அன்று வரை, 7 நாட்கள் தொடர்ந்து காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சி நிறைவில் சான்றிதழும் வழங்கப்படும். எனவே, இம்மாவட்டத்தில் பதிவு பெற்ற அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களும் இந்த பயிற்சியில் பங்கு பெற்று பயனடையலாம். பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டுமே இப்பயிற்சி வழங்கப்படும். மேற்படி பயிற்சியானது லி-ஜி நிறுவனத்தின் மூலம் நமது மாவட்டத்தில் வழங்கப்படுகிறது. அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களாகிய நீங்கள் உங்கள் தொழிலில் மேலும் வளர்ச்சியடைய இப்பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும். இப்பயிற்சியில் முழுமையாக கலந்துகொண்டு உங்கள் திறன்களை வளர்க்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கோணம் அரசு தொழில் பயிற்சி நிலைய முதல்வர் திரு.பிலிப் ஆல்வின், தொழிலாளர் உதவி ஆணையர் சமூக பாதுகாப்பு திட்டம் திரு.ராஜா குமார், உதவி இயக்குநர் திறன்பயிற்சி திரு.லெட்சுமிகாந்தன், கூட்டத்தில் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# மதுரை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்

மதுரை, செப்.23-

மதுரை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிட தரைதள கூட்ட அரங்கில், 25.09.2025 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 03.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்படவுள்ளது. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் 25.09.2025 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 02.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்படும் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு, வருகைபுரிந்து தங்களது குறைகளை இரட்டை பிரதிகளில் மனுவாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரடியாக வழங்கி தீர்வு காணுமாறு மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன்குமார்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக விருதுகள் வழங்கப்படவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, செப்.23-

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக விருதுகள் வழங்கப்பட உள்ளது. சுற்றுலா ஆப்பரேட்டர், பயண கூட்டாளர், விமான கூட்டாளர், தங்குமிடம், உணவகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நட்சத்திர நிகழ்ச்சியாளர், முக்கிய சுற்றுலா ஆப்பரேட்டர், சாகச சுற்றுலா மற்றும் முகாம் தள ஆப்பரேட்டர், சுற்றுலா வழிகாட்டி, தமிழ்நாடு பற்றிய சிறந்த விளம்பரம், சுற்றுலா ஊக்குவிப்பு விளம்பர பொருள், சுற்றுலா தொடர்பான கல்வி நிறுவனம், மாநாடு மற்றும் கண்காட்சி அமைப்பாளர்கள், சிறந்த ஊடக செல்வாக்கு செலுத்துபவர், சிறந்த விளம்பரம், சிறந்த விளம்பரதாரர் போன்ற 17 வகையான பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் www.tntourismawards.com என்ற இணையதளத்தின் வயிலாக 2025 செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இது தொடர்பான விபரங்களுக்கு மாவட்ட சுற்றுலா அலுவலர், மாவட்ட சுற்றுலா அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருநெல்வேலி (தொலைபேசி எண்:0462 2500104, 9176995877) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்தெரிவித்துள்ளார்.

காரைக்குடி மாநகராட்சி பகுதியில் இணைக்கப்பட்டுள்ள இலுப்பக்குடி ஊராட்சி பகுதிகளுக்கான

# "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது, வருகின்ற 23.9.2025 அன்று லெட்சுமி நகர் சமுதாயக்கூடத்தில் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்




சிவகங்கை, செப்.23-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற செப்டம்பர் 23 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சி பகுதியில் இணைக்கப்பட்டுள்ள இலுப்பக்குடி ஊராட்சிக் குட்பட்ட பகுதிகளுக்கென லெட்சுமி நகரில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி, செப்.23-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார் . மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் செவித்திறன் குறைபாடுடைய 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3285 வீதம் மொத்தம் ரூ.13,140/ மதிப்பிலான காதொலி கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 475 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்த ப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ. ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோயம்புத்தூர் மாவட்டம்: தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கி கடை நிலையில் இருந்தவர்களை உயர்த்தி தொழில் முனைவோர்களாக உருவாக்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு பயனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்தனர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ (தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்) மூலம் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சமூக பொருளாதார அதிகாரமளித்து வளம் உண்டாக்க தொழில் முனைவு திட்டத்தின் மூலம் 35 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடனுதவியும், PM-AJAY (Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojna) என்ற திட்டத்தின் கீழ் தனிநபர்களுக்கு திட்டத்தொகையில் 50% அல்லது ரூ.50,000 வரை மானியத்துடன் கூடிய கடனுதவியும், PM-AJAY SHG Group (Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojna Group) என்ற திட்டத்தின் கீழ் 12 பேர் கொண்ட மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியில் 50 சதவீதம் மானியம் அல்லது ரூ.6 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடனுதவியும் மற்றும் நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தின் கீழ் மகளிர் பெயரில் சொந்தமாக விவசாய



நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பு விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் உதவியும் வழங்கப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாட்கோ மூலம் 2024-2025 ஆம் ஆண்டில் CM-ARISE முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சமூக பொருளாதார அதிகாரமளித்து வளம் உண்டாக்க தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 79 நபர்களுக்கு ரூ.1.89 கோடி மானியத்தில், ரூ.5.46 கோடி மதிப்பீட்டில் கடனுதவியும், PM-AJAY (Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojna) திட்டத்தின் கீழ் தனிநபர்களுக்கு திட்டத்தொகையில் 50% அல்லது ரூ.50,000 ஆதிதிராவிடர் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட புதுமையான திட்டங்களுக்கு திட்டத்தின் கீழ் 11 நபர்களுக்கு ரூ.5.50 இலட்சம் மானியத்துடன் ரூ.14.09 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும் என மொத்தம் 90 நபர்களுக்கு ரூ.1.94 கோடி மானியத்தில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில் முனைவுத் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்ற பயனாளி திரு.இராஜீவ் அவர்கள் தெரிவித்ததாவது,

என் பெயர் இராஜீவ். நான் இரத்தினபுரி பகுதியில் வசித்து வருகின்றேன். நான் பத்தாம்வகுப்பு வரை படித்துவிட்டு ஓட்டுநர் உரிமம் பெற்று Acting driver ஆக கார் ஓட்டி வந்தேன். மாதம் ரூ.15000 வரை வருமானம் கிடைத்தது. எனது வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி, குழந்தையை படிக்க வைப்பது மிகுந்த சிரமமாக இருந்தது. இதனால் நானே பயனியர் வாகனம் வாங்கி வாடகைக்கு ஓட்டி வந்தால் அதிகமான வருமானம் கிடைக்கும். அதன் மூலம் குடும்பச் செலவுகளை மேற்கொள்ளுவதற்கும், குழந்தையின் படிப்பு செலவுகள் அனைத்தையும் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என நினைத்தேன்.

ஆனால் பயணியர் வாகனம் வாங்கும் அளவிற்கு என்னிடம் பண வசதியில்லை. ஏதாவது ஒரு கடனுதவி பெற்று பயணியர் வாகனம் வாங்கி விடலாம் என்று பல நாட்கள் அலைந்து சிரமப்பட்டேன். எனக்கு யாரும் கடன் கொடுக்க முன் வரவில்லை. இந்நிலையில் தாட்கோ மூலம்



மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுவதாக தகவலை அறிந்தேன். தாட்கோ அலுவலகத்திற்கு சென்று விவரம் கேட்டு, பயணியர் வாகனம் வாங்க உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தினை பதிவு செய்தேன். எனக்கு பயணியர் வாகனம் வாங்குவதற்கான கடனுதவி உத்தரவு கிடைக்கப்பெற்றது.

தாட்கோ மூலம் 35 சதவிகிதம் மானியம் அதாவது ரூ.2,78,000 மானியத்தில் ரூ.7,95,000 கடனுதவியில் பயணியர் வாகனம் வாங்கினேன். தற்போது அதைக் கொண்டு வெளியில் வாடகைக்கு ஓட்டி வருகிறேன். இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு வங்கிக் கடன் செலுத்தியது போக ரூ.20,000க்கும் அதிகமாக வருமானம் கிடைக்கின்றது.

பிறரிடம் கார் ஓட்டுநராக சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்த நான் சொந்த பயணியர் வாகனம் உரிமையாளராக ஆக வேண்டுமென்று நீண்ட நாட்கள் கனவு கண்டு வந்தேன். எனது கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாட்கோ மூலம் மானியத்தில் சொந்த கார் வாங்குவதற்கு உதவி செய்துள்ளார்கள்.

இதன் மூலம் எனக்கு குடும்பச்செலவுகள், குழந்தைகளின் படிப்புச்செலவுகள் பெற்றோர்களின் மருத்துவச் செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் மேற்கொள்வதோடு மாதந்தோறும் வங்கிக்கடனை முறையாக செலுத்தியது போக சிறு தொகை சேமிக்கவும் முடிகின்றது, எங்களைப் போன்ற ஏழைகளையும் தொழில் முனைவோர்களாக உருவாக்கிட இத்திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், குடும்பத்தின் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தாட்கோ மூலம் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்ற பயனாளி திருமதி.மு.சுமதி தெரிவித்ததாவது,

என் பெயர் சுமதி. நான் சிக்காரம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்ப சூழ்நிலை காரணமாக நான் 5 வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளேன். ஆகவே என்னால் கூலி வேலை தவிர்த்து மற்ற வேலைகளுக்கு செல்ல முடியவில்லை. நான் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் 100 நாள் வேலைக்கு செல்வேன். எனது கணவர் பெயர் திரு.முருகன். அவரும் கூலி வேலை பார்த்து வருகிறார். எங்களுக்கு அனைத்து நாட்களும் வேலை இல்லாத காரணத்தால் தினந்தோறும் வருமானம் கிடைப்பதில்லை. சாதாரண குடும்பமான எங்கள் குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தோம். எங்களுக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் இருக்கிறார்கள்.

அப்பொழுதுதான் நாளிதழ்களில் தாட்கோ மூலம் விவசாய நிலம் மானியமாக



வழங்கப்படுவதாகவும், அதற்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் என்ற செய்தியினை பார்த்து, நானும் உடனடியாக தாட்கோ அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பிக்கும் முறையையும், தகுதியையும் அறிந்து கொண்டேன். உடனடியாக தாட்கோ இணையதளத்தில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டம் மூலம் நிலம் வாங்கிட உரிய ஆவணங்களோடு எனது விண்ணப்பத்தினை பதிவு செய்தேன்.

எனது விண்ணப்பித்தினை பரிசீலித்து ரூ.4,95,000 மானியம் வழங்கி 100 சதவீதம் பத்திரப்பதிவு இலவசமாக செய்து நிலத்தினை கிரையம் செய்து கொடுத்தார்கள்.

தற்போது நிலத்தில் வாழை மரம் வைத்துள்ளேன். என் பெயரில் சொந்தமாக விவசாய நிலம் வாங்கும் எனது கனவை தாட்கோ மானியம் வழங்கி நனவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று பெருமையுடன் தெரிவித்தார்.

**தொகுப்பு**
**திரு ஆ.செந்தில் அண்ணா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.**
**திரு.இரா.சரண்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி)**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் சார்பில்

## சமுதாய வளப்பயிற்றுநர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன: வருகின்ற 25.9.2025 தேதிக்குள் சமர்ப்பித்திடல் வேண்டும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.23-

வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் வாயிலாக, ஏழை மக்களின் திறன் வளர்ப்பு மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வறுமையை குறைப்பதே மக்கள் கற்றல் மையத்தின் தொலை நோக்கு பார்வையாகும். மாவட்டத்திலுள்ள வட்டார அளவிலான குழு கூட்டமைப்பின் பிரிதிநிதிகளை கொண்டு மகமை அமைக்கப்படுகிறது.

மேலும், வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கிட சமுதாய வளப்பயிற்றுநர்களை தேர்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாய வளப்பயிற்றுநர்களை கொண்டு, சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. எனவே, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் சார்பில் சமுதாய வளப்பயிற்றுநர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 21 வயது பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு ஏதுமில்லை. பயிற்சி நடத்துவதற்கு தேவையான உடற்தகுதி மற்றும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். சுய உதவிக்குழுவில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருத்தல் வேண்டும். மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவிலான பயிற்சிகளில், குறைந்தது 5 முதல் 10 பயிற்சிகளில் கலந்து கொண்டவராக இருத்தல் வேண்டும். கைபேசி செயலிகளை பயன்படுத்த தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

சமுதாய வளப்பயிற்றுநராக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் சார்ந்த சுய உதவிக்குழு வாராக்கடன் நிலை இல்லாது இருத்தல் வேண்டும். சமுதாய வளப்பயிற்றுநராக செயல்படுவதற்கு குடும்ப ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும்.

மேலும், செயல்படாத சுய உதவிக்குழுக்கள் மற்றும் சமுதாய சார்ந்த அமைப்புகளிலிருந்து சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட மாட்டார்கள். சமுதாய சார்ந்த அமைப்புகளில் மதிப்பூதியம் பெறும் பணியாளர்களும், சமுதாய வளப் பயிற்றுநர்களாக தேர்வு செய்யப்பட மாட்டார்கள் (மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் சமுதாய வளப்பயிற்றுநர்களாக செயல்பட வரும் பட்சத்தில் அவர் வகித்த பொறுப்பிற்கு தகுந்த நபரை உருவாக்கி செயல்பட வைத்திருத்தல் வேண்டும்).

அரசியலில் முக்கிய பொறுப்பில் இல்லாதவராகவும், தனியார் நிறுவனங்களில் முழு நேரமாகவோ (அ) பகுதி நேரமாகவோ பணிபுரிபவராகவோ இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர், தொடர்புடைய குழுவிலிருந்து சமுதாய வளப்பயிற்றுநராக பரிந்துரைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி, அத்தீர்மான நகலை விண்ணப்பத்துடன் இணைத்திடல் வேண்டும். ஒரு ஊராட்சிக்கு விருப்பம் மற்றும் தகுதியுள்ள எத்தனை நபர்கள் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.

எனவே, தகுதியான நபர்கள் தங்களது விண்ணப்பங்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வருகின்ற 25.9.2025 தேதிக்குள் சமர்ப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் / தருமபுரி, செப்.23-

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 9,731 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 11,397 கனஅடியாக உயர்ந்தது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 6,000 கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.



அணை நீர்மட்டம் நேற்று 118.62 அடியாகவும், நீர் இருப்பு 91.28 டிஎம்சியாகவும் இருந்தது. ஒகேனக்கல் காவிரியில் நேற்று நீர்வரத்து 9,500 கனஅடியாக இருந்தது.

## சத்குருவின் ஈஷா கிராமோத்சவம் நாட்டை விளையாட்டில் வல்லரசாக்கும் முன்னெடுப்பு

கோவை, செப்.23-

கோவை, சத்குருவின் ஈஷா கிராமோத்சவம் விளையாட்டுத் திருவிழா, நம் நாட்டை விளையாட்டில் வல்லரசாக்கும் நோக்கில் எடுக்கப்படும் மிகப்பெரிய முன்னெடுப்பு என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் பேசினார்.

ஈஷா ஆதியோகி வளாகத்தில் 17வது ஈஷா கிராமோத்சவ விளையாட்டுத் திருவிழாவின் இறுதிப்போட்டிகள் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

சத்குரு முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால், செஸ் கிராண்ட் மாஸ்டர் வைஷாலி, பாரா ஒலிம்பிக் வீராங்கனை பவினா படேல் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகளையும், பரிசுத்தொகையையும் வழங்கினர்.




17 ஆவது ஈஷா கிராமோத்சவம் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா மற்றும் முதல் முறையாக ஒடிசா உள்ளிட்ட 6 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசமான புதுச்சேரியிலும் நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான கைப்பந்து (வாலிபால்) மற்றும் பெண்களுக்கான எறிபந்து (த்ரோபால்) போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆறு மாநிலங்களுக்கு இடையேயான இறுதிப் போட்டி ஆதியோகியில் நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான வாலிபால் இறுதிப் போட்டியில் சேலத்தை சேர்ந்த உத்தமசோழபுரம் அணி வென்றது. கர்நாடகாவை ஹெகதிஹள்ளி அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கர்நாடகாவை சேர்ந்த படகணுரு கிராம அணி முதல் வென்றது. கோவையை சேர்ந்த தேவராயபுரம் அணி இரண்டாம் இடத்தை பிடித்தது. பாரா வாலிபால் போட்டியில் கிருஷ்ணகிரி அணி முதல் இடத்தையும், கன்னியாகுமரி அணி இரண்டாம் இடத்தையும் வென்றது. வாலிபால் மற்றும் த்ரோபால் போட்டிகளில் முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகளுக்கு முறையே 5,00,000, 3,00,000, 1,00,000, 50,000 பரிசுத் தொகையாக வழங்கப்பட்டன. மொத்த பரிசுத்தொகையாக 67 லட்சம் வழங்கப்பட்டது.

இவ்விளையாட்டு போட்டிகள் கடந்த ஆகஸ்ட் 16ஆம் தேதி தொடங்கி மொத்தம் 183 இடங்களில் நடைபெற்றது. இதில் 35,000க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 5,472 அணிகள் மூலம் 12,000க்கும் மேற்பட்ட பெண்கள் உள்பட 63,000க்கும் மேற்பட்ட கிராமப்புற மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டு திருவிழாவின் இறுதிப் போட்டி மற்றும் நிறைவு நாளை முன்னிட்டு ஆதியோகி முன்பு மிகப் பிரம்மாண்டமான முறையில் 2000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட வள்ளி கும்மி நிகழ்ச்சி நடைபெற்றது. இதனுடன் காலை முதல் மாலை வரை 6 மாநில கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இத்திருவிழாவில் வண்ண கோலப் போட்டி, சிலம்ப போட்டி, கிராமிய சமையல் போட்டி மற்றும் 20க்கும் மேற்பட்ட வேடிக்கை விளையாட்டுப் போட்டிகளும் நடைப்பெற்றன. வண்ண கோலப்போட்டியில் 1200க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். இதில் முதல் நான்கு இடங்களை வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒரு புடவை பரிசாக வழங்கப்பட்டது. இதனுடன் 6 மாநில பாரம்பரிய உணவுகளை கொண்ட உணவு அரங்குகளும் இடம்பெற்று இருந்தன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் தொழில்முறை விளையாட்டு வீரர்களுக்கானதாக இல்லாமல் விவசாயிகள், தூய்மை பணியாளர்கள், மீனவர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள், இல்லத்தரசிகள் ஆகிய எளிய கிராம மக்களுக்காக நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோஆப்டெக்ஸ் 30% சிறப்புத் தள்ளுபடியுடன் விற்பனையை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் துவக்கி வைத்தார்

மதுரை, செப்.23-

கோ ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1938 ஆம் ஆண்டில் துவக்க பட்டு தொடர்ந்து 90 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வருகிறது.

கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் காஞ்சிபுரம், சேலம், திருவண்ணாமலை பட்டு சேலைகள், கோவை பட்டு சேலைகள், பட்டு வேட்டிகள், கைத்தறி சுங்குடி சேலைகள், காதிபுரம், செட்டிநாடு, சேலம், பரமக்குடி, திண்டுக்கல் அருப்புக்கோட்டை பருத்தி சேலைகள் மற்றும் கோவை கோரா பருத்தி சேலைகள் புதிய வடிவில் ஏராளமாக தருவிக்கப்பட்டுள்ளன.

மேலும் நவீன யுக ஆடவர்களை கவரும் விதமாக பருத்தி சட்டைகள், லினன் பருத்தி சட்டைகள், லுங்கிகள், வேட்டிகள், துண்டுகள், மகளிருக்கான சுடிதார் இரகங்கள், நைட்டிகள் மற்றும் குர்திஸ்கள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்காக தருவிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி இரகங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விதமாக தமிழக அரசு இந்த ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தீபாவளி பண்டிகையை கொண்டாடும் விதமாக பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களுக்கு 30% சிறப்புத் தள்ளுபடி வழங்கி உள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள 3 கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கும் சேர்த்து ரூ.3.90 கோடி, தீபாவளி விற்பனை குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மதுரை அங்கயற்கண்ணி விற்பனை நிலையத்தில் கடந்த ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.1.70 இலட்சங்கள் ஆகும். தீபாவளி 2025 விற்பனை குறியீடாக ரூ.200 இலட்சங்கள் மதுரை அங்கயற்கண்ணி விற்பனை நிலையத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோஆப்டெக்ஸ் ஜவுளி இரகங்களை மின் வணிக வலைதளமான www.cooptex.gov.in என்ற இணையதளத்தின் மூலமும் வாடிக்கையாளர்கள் வாங்கி பயன் பெறலாம். கோ ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்பு திட்டத்திலும் சேர்ந்து பயன்பெற வாடிக்கையாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

# வேலூர் நறுவீ மருத்துவமனை... மருத்துவ சேவையில் மகத்தான சாதனைகள்: நறுவீ மருத்துவனை தலைவர் முனைவர். ஜி.வி.சம்பத், வரலாற்று சாதனை

வேலூர், செப்.22-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர், ஆட்சியர் அலுவலக சாலை, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் நறுவீ மருத்துவமனை, மருத்துவ சேவையில் மகத்தான வரலாற்று சாதனைகள் படைத்து வருகிறது. வேலூரில், சுமார் 4 ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக பயணித்து வரும் நறுவீ மருத்துவமனை உலகத்தில் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. வேலூர் மற்றும் சுற்றுப்புற நகரங்கள் மற்றும் மாவட்ட மக்கள் தங்கள் மருத்துவ தேவைக்காக சென்னை உள்ளிட்ட புது நகரத்திற்கு செல்ல வேண்டிய கட்டாயத்தை முற்றிலுமாக நீக்கியுள்ளது. நறுவீ மருத்துவமனை என்று மருத்துவமனை தலைவர் முனைவர். ஜி.வி.சம்பத் என்று பெருமையாக தெரிவித்துள்ளார். பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உலகத்தரம் வாய்ந்த நறுவீ சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயங்கி வருகின்றது. சுமார் ஐந்து லட்சம் சதுர அடியில் மிகப் பிரம்மாண்டமான வடிவமைப்பில் உலக அளவில் போற்றக்கூடிய சர்வதேச அளவிலான தொழில்நுட்பத்தில் முதலிடம் பிடித்துள்ளது. நறுவீ மருத்துவமனை சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளிலிருந்து உலகத்தரம் கொண்ட மருத்துவ சாதனங்களுடன் 500க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்டுள்ளது. இதில் 100க்கும் மேற்பட்ட படுக்கைகள் தீவிர கண்காணிப்பு பிரிவை சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. 250க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இங்கு சிறந்த சாதனைகளைப் படைத்து வருகின்றனர். 300க்கும் மேற்பட்ட மருத்துவ உதவி குழுவினர் கொண்டு சுமார் 1000 பணியாளர்களுடன் வெற்றிகரமாக பல்வேறு சாதனைகள் படைத்து, இம்மருத்துவமனை வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

நறுவீ மருத்துவமனையில் உள்ள சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவுகள், 1. இருதய நோய், இருதய அறுவை சிகிச்சை மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, 2. நுரையீரல் நோய், நுரையீரல் அறுவை சிகிச்சை மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை, 3. கல்லீரல் நோய், கல்லீரல் அறுவை சிகிச்சை மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, 4. சிறுநீரக நோய், சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, 5. மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், 6. உட் சுரப்பிகளுக்கான சிகிச்சை,7. பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை, 8. குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை, 9. எலும்பியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 10. நரம்பியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 11. பிளாஸ்டிக் மற்றும் மறு சீரமைப்பு அறுவை சிகிச்சை (தீ காயங்கள் உட்பட) 12. சிறு நீரியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 13. குடல் வயிறு சம்பந்தப்பட்ட நோய் மற்றும் அதற்கான அறுவை சிகிச்சை ஆகிய மருத்துவ சிகிச்சைகள் அனைத்தையும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி சிறப்புமிகு தரம் கொண்ட மருத்துவமனையாக இடம்பெற்றுள்ளது. இந்த மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக சிறப்பு பிரிவு ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. கல்லீரல் சிகிச்சை அறுவை சிகிச்சை மற்றும் மாற்று அறுவை சிகிச்சையில் புகழ்பெற்ற எல் க்யூப் (L CUBE) மருத்துவக் குழுவுடன் நறுவீ மருத்துவமனை ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் கல்லீரல் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளும் சிறப்பான முறையில் மருத்துவம் அளிக்கப்பட்டு வருவது



சாதனைக்குரியதாகும்.

நறுவீ மருத்துவமனையில் 24 மணி நேர விபத்து மற்றும் அவசர சிகிச்சை, நெஞ்சு வலி, பக்கவாதம், உள்ளிட்டவைகளுக்கான அவசர சிகிச்சை, அதி தீவிர சிகிச்சை பிரிவு, ஆகியவை மிக சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. மேலும், மூட்டு வலி சிகிச்சை, பல் மருத்துவம், தோல் நோய் சிகிச்சை கண் மருத்துவம் மாற்று மருத்துவம் முதியோர் சிறப்பு சிகிச்சை உள்ளிட்ட 25 மேற்பட்ட சிறப்பு மருத்துவர் வசதிகள் கொண்ட இடமாக இம்மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு எக்ஸ்ரே, ஸ்கேன் அனைத்தும் பேப்பர் பிலிம் இல்லாமல் நவீன டிஜிட்டல் முறையில் எடுக்கப்படுகிறது அதிநவீன ஆடியோ மற்றும் வீடியோ வசதிகளுடன் மூன்று டெஸ்லா திறன் கொண்ட மேம்பட்ட தொழில் நுட்ப வசதியுடன் அகலமான குழாய் வடிவம் கொண்ட (MRI) scan எம் ஆர் ஐ ஸ்கேன் 128 பாகங்களாக பிரித்து காட்டும் தொழில்நுட்பம் கொண்ட சிடி ஸ்கேன் கருவி உள்ளிட்ட பல்வேறு அதிநவீன சர்வதேச அளவிலான தொழில்நுட்ப வசதிகளுடன் அமைந்துள்ளது.

மேலும், பிரான்ஸ் நாட்டின் ரோசா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ரோசா என்ற ரோபோட் மூலமாக மூளை அறுவை சிகிச்சை சிறப்பு வசதி உள்ளது. இந்த வசதி நாட்டில் நறுதி மருத்துவமனை உள்ளிட்ட மூன்று மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளது. மேலும் தீர்க்க முடியாத நோய் எனப்படும் வலிப்பு நோயின் தன்மையை கண்காணித்து சிகிச்சை அளிக்கும் வசதி இங்கு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது இவ் வசதி நாட்டில் இரண்டு மருத்துவமனைகளில் மட்டுமே உள்ள நிலையில் அது ஒன்றான நம்ம நிறுவீ மருத்துவமனையாக இருப்பது நமக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது.

எலும்பு ஸ்திர தன்மையை சோதிக்க டெக்ஸா ஸ்கேன் வசதி மெமோ கிராம் கருவி கொண்டு பெண்களின் மார்பு புற்றுநோயை கண்டறியும் சிறப்பு பரிசோதனை மற்றும் சிறப்பு பிரிவு உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவ வசதிகளை கொண்டதாக நம்ம நிறுவி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை விளங்குகிறது. நறுவீ மருத்துவமனையில் நோயாளிகளின் நலனை மட்டுமே முன்னிறுத்தி மிகவும் எளிய கட்டணங்களுடன் நோயாளிகளுக்கு தனி கவனத்துடன் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் என்று நறுவீ மருத்துவமனையின் தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தெரிவித்துள்ளார். இந்த மருத்துவமனை தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளில் சுமார் 7 லட்சம் புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று நலமுடன் திரும்பியுள்ளனர். உலக தரத்திலான தொழில்நுட்பங்களை கொண்டுள்ளதால் நறுவீ மருத்துவமனையில் இந்தியா மட்டும் என்று பல்வேறு நாடுகளில் இருந்தும் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். மேலும் நருவி மருத்துவமனை தொடங்கிய குறுகிய காலத்திலேயே இதயம் சிறுநீரகம் கல்லீரல் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கான அரசு அங்கீகாரத்தை பெற்று தற்போது இம்ம மருத்துவமனையில் உறுப்பு மாற்று சிகிச்சைகளும் வெற்றிகரமாக செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்கள் வேலூரிலேயே தங்களுக்கு தேவையான அனைத்து விதமான மருத்துவ சிகிச்சைகளை பெற முடியும். NABH எனப்படும் மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து இம்மருத்துவமனை அளிக்கும் சேவைகள் அனைத்திற்கும் ஆன அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று சி எஸ் எஸ் டி என்ற மருத்துவ உபகரணங்களை தொற்று இல்லாமல் சுகாதாரமான முறையில் பராமரிப்பு செய்து வழங்கும் துறையை அங்கீகரித்து சி ஏ எஸ் ஓ எனப்படும் மருத்துவ சேவை கூட்டமைப்பானது சான்றிதழ்களும் வழங்கியுள்ளது. டி என் பி மற்றும் டாக்டர் என் பி எனப்படும் சிறப்பு உயர் சிறப்பு முதுகலை மருத்துவ பட்டப்படிப்புகள் தொடங்குவதற்கு அனைத்து வசதிகளும் உள்ளதா என மத்திய அரசின் இந்திய மருத்துவ கழகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிபுணர் குழுவினர் மருத்துவமனையில் ஆய்வு செய்து அனுமதி வழங்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து மூன்று ஆண்டு முதுகலை மருத்துவ பட்ட மேற்படிப்புகளுக்கான மருத்துவம் (Anaesthesiology), கதிரியக்கவியல் (Radio diagnosis), மற்றும் மகப்பேறு மகளிர் நலன் (Obstetrics and gynecology), ஆகிய DNB critical care medicine) என்ற (Dr NB ) டாக்டர். என்.பி. படிப்புகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது என மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தெரிவித்துள்ளார்.

## கீழக்கரை பகுதியில் சிதிலமடைந்த கால்வாய் மூடிகள்

கீழக்கரை, செப்.23-

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கிழக்குத் தெரு, பட்டாணியப்பா, லட்சுமிபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பிரதான சாலையில் கால்வாய் மூடிகள் நீண்ட நாட்களாக சிதிலமடைந்து கிடப்பதால், அந்தப் பகுதி மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.





இப்பகுதியைச் சுற்றி பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள், தொழுகைக் கூடங்கள், கடைகள் போன்றவை இயங்கி வருகின்றன. தினந்தோறும் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவ, மாணவிகள் சைக்கிளிலும் நடந்து சென்று கல்வி பயின்று வருகின்றனர். அருகிலுள்ள இஸ்லாமியர் பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களும் இதே சாலையை வேறு வழியின்றி பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகள் வாங்கவும், வாகனங்கள் பயணிக்கவும் பயன்படும் பிரதானச் சாலையாக இது விளங்குகிறது.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், செப்.23-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 311 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரம்பை மண் எடுப்பதற்கான விதிமுறைகளை தளர்த்துக" சிவகங்கை மாவட்டம். விவசாயி வி.அப்துல்ரஹ்மான் கோரிக்கை



சிவகங்கை, செப்.23-

சிவகங்கை மாவட்டம் சாமியார்பட்டியில் நீர் நிலைகளில் கரம்பை மண் அள்ள விவசாயிகளுக்கு கரம்பை மண் எடுப்பதற்காக விதிமுறைகளைத் தளர்த்த வேண்டும் என விவசாயி கோரிக்கை விடுத்துள்ளனர். விதிமுறைகளைத் தளர்த்தினால் மட்டுமே, சரியான நேரத்தில் கரம்பை மண் எடுத்து பயன்படுத்த முடியும் என்று தெரிவித்தனர்.

மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஊருணிகள் மற்றும் பொதுப்பணித்துறைக் குச் சொந்தமான பாசன குளங்கள் உள்ளன. இந்த நிலையில் ஆண்டுதோறும் விவசாயப் பயன்பாட்டுக்கு கரம்பை மண் தேவைப்படுவதால் அதனை நீர் நிலைகளில் இருந்து எடுக்க அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், கரம்பை மண் அள்ளுவதற்குப் பல்வேறு விதிமுறைகள் உள்ளன. பெரும் இடையூறாக உள்ளது. தற்போது கரம்பை மண் அள்ள விவசாயிகள் வழங்கி உள்ள மனுக்கள்,?

அரசு கூறும் விதிமுறைகள் கல்குவாரி, கிரஷர் மணல் எடுப்பதற்கு உண்டான விதிமுறைகளாகும். ஆனால், மாவட்ட நிர்வாகம் விவசாயிகளுக்கும் இந்த விதிமுறைகளை கொண்டு வருவது வேதனையளிக்கிறது. இதனால் குறிப்பிட்ட காலத்துக்குள் கரம்பை மண் அள்ள முடியாத சூழல் ஏற்படும்.எனவே விதிமுறைகளை தளர்த்தி வட்டாட்சியர் அனுமதியுடன் நீர் நிலைகளில் இருந்து, கரம்பை மண் அள்ள அனுமதி வழங்க வேண்டும்“ என்று சாமியார் பட்டி வி.அப்துல்ரஹ்மான்



## மின்தடை அறிவிப்பு

சிவகங்கை, செப்.23-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் இன்று செவ்வாய்க்கிழமை (செப் 23) காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை இளையான்குடி, கீழாயூர், தாயமங்கலம், சோதுகுடி, கண்ணமங்கலம், புதூர், நகரகுடி, கருஞ்சுத்தி மற்றும் இதன் சுற்றுவட்டார பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் சொர்ணப்பா (பொறுப்பு) அறிவித்துள்ளார்..

அதேபோல சிவகங்கை மாவட்டம் இடையமேலூர் துணை மின்நிலையத்தில் மாதாந்திர மின் பராமரிப்பு காரணமாக இன்று (செப்23) தமராக்கி, குமாரப்பட்டி, கண்டாங்கிப்பட்டு, மலம்பட்டி, இடையமேலூர், சாலூர், கூட்டுறவுப்பட்டி, மேலப்பூங்குடி, சக்கந்தி, புதுப்பட்டி ஆகிய பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின்செயற் பொறியாளர் தெரிவித்துள்ளார்..

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சி சீதாலட்சுமி நகர் மற்றும் கொடிக்குளம் கிராமத்தில்

## புதிய நியாய விலை கடைகளை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார்

மதுரை, செப்.23-

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சி சீதாலட்சுமி நகர் மற்றும் கொடிக்குளம் கிராமத்தில் புதிய நியாய விலை கடைகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி தெரிவிக்கையில்:

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் மொத்தம் 347 சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.ஊரகப்பகுதிகளில் /உள்ளது. ஊரகப்பகுதிகளில்/› 15 துறைகள் மூலம் 46 சேவைகளும் அளிக்கப் படுகிறது. இம்முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படவுள்ளது.

இதனை முழுமையாக மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கலைஞர் மகளிர் உரிமை புதிதாகப் பெறுவதற்கும் விடுபட்டவர்களுக்கும் இந்த முகாமில் மனுக்கள் பெறப்படுகிறது. வாரந்தோறும் சனிக்கிழமை அன்று நடைபெறும் நலம் காக்கும் ஸ்டா லின் திட்டம் மூலம் பல்நோக்கு சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றன. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று குடிமை பொருட்கள் வழங்கப்படுகிறது.

A2401 ஒத்தக்கடை கூட்டுறவு நகர கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஒத்தக்கடை முழுநேர நியாய விலைக் கடையில் 1703 குடும்ப அட்டைதாரர்கள் உணவு பொருட்கள் பெற்று வந்தனர். இதில், சீதாலட்சுமி நகர் பகுதியில் உள்ள 400 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் விநியோகம் செய்யும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 13.56 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடை திறக்கப்பட்டுள்ளது.

மேலும், கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொடிக்குளம் கிராமத்தில் A2968 சிட்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கொடிக்குளம் கிராமத்திற்கு உட்பட்ட 492 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் விநியோகம் செய்யும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 9.97 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடை திறக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.வானதி அவர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.சதீஷ் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ. பாலசுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161